822

உ

சிவமயம்.

மூவர் அம்மானை.

சென்னை:
பூமகள்விலாசம் பிரஸ்ஸில்
பதிப்பிக்கப்பெற்றது.
1925.

உ

கடவுள் துணை

மூவர் அம்மானை.

OFFICE OF THE REGISTRAR
17 MAY 1928
MADRAS

சென்னை:

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1927.

நெ-24, தாண்டவராயப்பிள்ளை வீதி.

ஈசன்
வீசுட
வீசு

உ

சிவமயம்

மூவர் அம்மானை

புந்திவனஞ்சூழும்பொருவில்லாப்பிள்ளையார்
தந்திமுகன்குடவயிற்றன்சப்பாணியம்மானே
தந்திமுகன்குடவயிற்றன்சப்பாணியாமாகில்
இந்தவயிற்றிற்கிரையெங்கேயம்மானே
இன்றென்றேயீசனீரக்கலுற்ருனம்மானே. க

தெள்ளுதமிழ்பெருகுந்திருமுட்டத்தெம்பெருமான்
உள்ளநிலமெல்லாமுழுதுண்டாரம்மானே
உள்ளநிலமெல்லாமுழுதுண்டாராமாகில்
கள்ளனிவனென்றுகாட்டுவதென்னம்மானே
கட்டாரோபோரிற்கதிரொளித்தாலம்மானே. உ

திரிசிரமாபுரவீசன்[illegible]டிமங்க[illegible]காய்வேடம்
[illegible]த்துமருத்துவத்தின்ருயர்ஞரம்மானே
தரித்துமருத்துவத்தின்ருயாஞராமாகில்
மருத்தெண்ணெச்சிக்கன்றிமணமிவர்க்கேதம்மானே
மட்டுவார்குழலிருக்கமண்மரிதோவம்மானே. ங

[illegible]

பூங்காவனமுஞ்சூழும் புள்ளிருக்கும்வேளூரார்
பாங்கானதென்மதுரைப்பாணன்காணம்மானை
பாங்கானதென்மதுரைப்பாணனேயாமாகில்
தாங்காதிழையெடுத்துத்தைப்பாரோவம்மானை
தையலுக்குநல்லசமர்த்தன்காணம்மானை. ௧௨

கள்ளிருக்கும்பூச்சோலைக்காளத்தியீச்சுரனார்
வெள்ளரியுங்கைக்கரியும்விரைந்துநட்டாரம்மானை
வெள்ளரியுங்கைக்கரியும்விரைந்துநட்டாராமாகில்
புள்ளரியுமங்கேபுடலிட்டாரம்மானை
புடலிட்டபூசனியும்பூத்ததுகாணம்மானை. ௧௩

சூட்டுபுகழ்தென்மதுரைதொல்லுலகிற்சொக்கேசர்
காட்டுக்குள்வீற்றிருந்தகாரணர்காணம்மானை
காட்டுக்குள்வீற்றிருந்தகாரணரேயாமாகில்
இருட்டுப்பயங்கள்சற்றுமில்லையோவம்மானை
எட்டானைசூழ்ந்திருந்தாலென்னபயமம்மானை. ௧௪

கள்ளவிழுஞ்செஞ்சடையார்காளத்தியீச்சுரனார்
வள்ளலார்செஞ்சடைமேல்வாளரவுண்டம்மானை
வள்ளலார்செஞ்சடைமேல்வாளரவுண்டாமாகில்
துள்ளிவருமம்புலியைத்தொடருமோவம்மானை
தொடருமோமயிலாடுந்துறைகண்டாலம்மானை.

சோற்றுன்மடையருக்குஞ்சொக்கர்திருக்கூடலிலே
வேற்றுளாய்மண்சுமக்கவேண்டினர்கானம்மானை

வேற்றாளாய்மண்சுமக்கவேண்டினரேயாமாகில்
மாற்றானடிக்கவழக்குண்டோவம்மானே
வைகையிலேதானடிக்கவழக்குண்டோவம்மானே.

ஆறுமுகமாறாறாயாகமெல்லாம்வேறாய்
வீறுடையசண்முகனார்வேதாந்தியம்மானே
வீறுடையசண்முகனார்வேதாந்தியாமாகில்
மாறுடையவேடவள்ளிமருவதென்னவம்மானே
மருவென்றேசிவமலையின்மருவினாரம்மானே. ௧௭

மாலறியாக்கள்ளனிவன்வந்துமன்றிலேபுகுந்தானே
கோலமுடனாடெடுத்துக்கொண்டொளித்தாரம்மா
கோலமுடனாடெடுத்துக்கொண்டொளித்தாராமாகில்
காறலைகடோலெலும்புகண்டதுண்டோவம்மானே
கண்டலவோவிருகழுகுகாத்திட்டதம்மானே. ௧௮

தெண்டிரைசூழ்தில்லைச்சிவகாமித்தாயார்க்குக்
கண்டமெல்லாஞானக்கரும்புகாணம்மானே
கண்டமெல்லாஞானக்கரும்புகாணாமாகில்
அண்டர்பிரானாலைதனையாட்டரோவம்மானே
ஆடிப்புலியூரமர்ந்தனர்காணம்மானே. ௧௯

மங்கையுமைபாகவழுவூர்விடைநாதர்
திங்களுடன்கங்கைதினஞ்சுமந்தாரம்மானே
திங்களுடன்கங்கைதினஞ்சுமந்தாராமாகில்

அங்கமெல்லாம்குளிர்ச்சியாகாதோவம்மானே
ஆமென்றேயானையுரித்தணிந்தனர்காணம்மானே.

வற்றாதவகையிலும்வாள்விசயன்றன்கையிலும்
பற்றாமலன்னரடிபட்டனர்காணம்மானே
பற்றாமலன்னரடிபட்டனரேயாமாகில்
செற்றார்புரமெரித்தசேவகமேதம்மானே
சேவகத்தைக்கேட்கச்சிரிப்பலவோவம்மானே. ௨௧

ஆதாரமாங்குடந்தையானகும்பநாயகனார்
கோதாடுமன்மதனைக்கொண்டெரித்தாரம்மானே
கோதாடுமன்மதனைக்கொண்டெரித்தாராமாகில்
மாதாபிதாக்கள்பழிவாங்குவரோவம்மானே
வாங்குமுன்னேவாய்தனிலேமண்விழுந்ததம்மானே.

தெற்குமுகமாயிருக்குந்தில்லைச்சிற்றம்பலவர்
நற்புவியேழுக்குகந்தநாயகர்காணம்மானே
நற்புவியேழுக்குகந்தநாயகரேயாமாகில்
அற்பவிடப்பெண்ணையணைவதென்னம்மானே
அணைந்தல்லோவுருவமானதுகாணம்மானே. ௨௫

விரித்தசடைமுடியார்மேலைச்சிதம்பரனார்
வருத்தமுடன்றமக்கொருகால்வாதங்காணம்மானே
வருத்தமுடன்றமக்கொருகால்வாதமேயாமாகில்
பெருத்தவிடநஞ்சையுண்டுபிழைத்தாரேவம்மானே
பிழைத்தலவோநடமாடப்புறப்பட்டாரம்மானே.

பாட்டைப்படித்துப்பயனறியமாட்டாதார்
ஏட்டைப்படித்தோதியெய்தினர்காணம்மானே
ஏட்டைப்படித்தோதியெய்தினரேயாமாகில்
பாட்டின்விதியின்பயனறியாரம்மானே
பயனறியவாசியன்றேபட்டனர்காணம்மானே. உரு

பெற்றபிள்ளைபேரறிந்துபேரிட்டழையாமன்
மற்றுமொருபேரைவகுத்தழைத்தாரம்மானே
மற்றுமொருபேரைவகுத்தழைத்தாராமாகில்
பெற்றதகப்பனதுபேரறியாரம்மானே
பேரறியவாசியன்றேபோய்மாண்டாரம்மானே.

தெண்டிரைசூழ்தில்லைசிவகாமிசுந்தரியாள்
மண்டலமீரேழுக்குமாதாகாணம்மானே
மண்டலமீரேழுக்குமாதாவேயாமாகில்
தண்டிகையேறிச்சிலர்கடாங்குவதென்னம்மானே
தாங்குவதுமேறுவதுந்தருமந்தானம்மானே. உஎ

கல்லாலின்கீழிருக்கும் காளத்தியார்தமைக்காக்கும்
பொல்லாச்சிலந்தியொன்று பொருந்தினதென்னம்
மானே, பொல்லாச்சிலந்தியொன்று பொருந்தின
தேயாமாகில்,வல்லானொருபணிக்கன்வந்ததுண்டோ
வம்மானே, வந்தன்றோ வேடன்வரம்பெற்றானம்
மானே. உஅ

கண்டவர்க்குமுத்திகொடுக்குங்கணபதிக்கு
மண்டலத்தையுண்டதொருமாமனுண்டோவம்மானே

மண்டலத்தையுண்டதொருமாமனுண்டேயாமாகில்
கொண்டிருக்கப்பெண்ணைக் கொடுப்பார்களோ வம்மா
னே, கொம்பனுக்கும்பெண்ணைக் கொடுப்பாரோ
யம்மானே. ௨௯
மாட்டிற்பவனிவருமதுரைச்சொக்கனார்
காட்டில்விறகொடித்த காரணர்காணம்மானே
காட்டில்விறகொடித்தகாரணர்காணுமாகில்
கூட்டியதைக்கட்டக்கொடியுண்டோவம்மானே
கூடாதோபாகங்குடியிருந்தாரம்மானே. ௩0
பாரிற்புகழ்படைத்தபாரமலைச்சிலையான்
வாரிநஞ்சையுண்டமிதமத்தனகாணம்மானே
வாரிநஞ்சையுண்டமதமத்தனேயாமாகில்
கூரறியநஞ்சுதான்கொல்லாதோவம்மானே
கொல்லுமோமாற்றறிந்து கொண்டக்காலம்மானே.
திங்கடனைமுடித்தசிக்கபுரியீச்சரனார்
தங்கவேளைக்கரும்பைச்சுட்டனர்காணம்மானே
தங்கவேளைக்கரும்பைச்சுட்டனரேயாமாகில்
அங்கமெல்லாநீலவன்னமானதென்னேவம்மானே
ஆகாதோவாலமடர்ந்துநின்றாலம்மானே. ௩௨
தேனமருஞ்சோலைத்திருவரங்கத்தெம்பெருமான்
ஆனவாதாணுண்பெண்ணலியினர்காணம்மானே
ஆனவர்தாணுண்பெண்ணலியனரேயாமாகில்
ஜானகியைக்கொள்ளுவரோதாரமாயம்மானே
தாரமாய்கொண்டதுவுஞ்சாபத்தாலம்மானே. ௩௩

திருக்கிளர்விராலிமலைச்செவ்வேலரோதிவைத்த
குருக்கடலைதன்னிலேகுட்டினர்காணம்மானே
குருக்கடலைதனிலேகுட்டினரேயாமாகில்
பெருக்கவிவர்க்கும்பேயுண்டோவம்மானே
பெருமையிலுமேலானபெருமாள்காணம்மானே. ()

எடுத்தபுகழாங்கவரேழுலகுந்தானறியப்
படுத்திருந்தநாகம்படமெடுத்ததம்மானே
படுத்திருந்தநாகம்படமெடுத்ததாமாகின்
அடுத்துநின்றகருடனைக் கண்டஞ்சாதோவம்மானே
அஞ்சுதலைக்கொண்டல்லோவமர்ந்திருந்ததம்மானே

அத்திபுரமெரித்தவாலங்காட்டப்பருக்கு
நெற்றிக்கண்ணென்றுநெருப்புகாணம்மானே
நெற்றிக்கண்ணென்றுநெருப்புகாணுமாகில்
பற்றிச்சடையிற்படராதோவம்மானே
படருமென்றேகங்கைபதிவிருந்தாளம்மானே. ௨௬

தேசத்துக்கொப்பாகச்சிதம்பரத்துத்தெற்காக
வாசத்துக்கேற்றதலமாய்புரமம்மானே
வாசத்துக்கேற்றதலமாய்புரமாகில்
காசிக்குப்போனபலன்காணுமோவம்மானே
காவேரிக்கரைகண்டாற்காணுங்காணம்மானே. ௨௭

பெருங்கவாயத்துறையும்பெருமயிலுஞ்சென்மயிலு
முருங்கையிலேயத்திமுளைத்ததுகாணம்மானே [ம்

முருங்கையிலேயத்திமுளைத்ததுகாணுமாகில்
பருங்காயாய்க்காய்த்துப்பறிப்பாரோவம்மானே
பறித்தல்லோகொம்படித்துப்பண்ணுகிறாரம்மானே

கோணாரிளமுலையார்கோதையிடப்பாகனார்
சேணாடர்போற்றுந்திரிபாகர்காணம்மானே
சேணாடர்போற்றுந்திரிபாகரேயாமாகில்
ஏனாதிமால்பிரமற்கெட்டுவரோவம்மானே [னே.
இடைமதிக்குங் குசைமதிக்கு மெட்டுவரோயம்மா

தண்ணிய சீர்ப்புணலுடனட்டாற்றோ ரியாவருக்குங், கண்ணிலும்வாயிலு நெருப்பைக்கையிலு முண்டோவம்மானே, கண்ணிலும்வாயிலுருநெருப்பைக்கையிலுமுண்டேயாமாகில், எண்ணரிய திருமேனியரிவுண்டோவம்மானே, எறிந்தலவோ நட்டாற்றிலிருக்கின்றாரம்மானே. ௪0

நாடுநகரிற்சிறந்தசம்புநாதற்கிருப்பிடத்தில்
ஓடுஞ்சலம்பெருகியூற்றெடுத்ததம்மானே
ஓடுஞ்சலம்பெருகியூற்றெடுத்ததாமாகில்
சாடுஞ்சிலந்தியொன்றுதானுண்டோவம்மானே
தலத்திலொருசிலந்திதானுண்டோவம்மானே. ௪௧

சுத்தன்பறட்டன்சுவாமிவடிவேலன்
எந்தன்குலத்திற்கிருளன்காணம்மானே
எந்தன்குலத்திற்கிருளனேயாமாகில்

பத்தன்கிழங்குகொல்லவல்லவனேவம்மானே
வள்ளிக்கொடிக்கும்பூரணன்காணம்மானே. ௪௨

செல்வத்திலேபிறந்துதிருக்கடையூரானைநம்பி
வில்வமெடுத்தேத்துதற்குவினைவருமோவம்மானே
வில்வமெடுத்தேத்துதற்குவினைவருமேயாமாகில்
வில்வவிருட்சமெல்லாம்வீண்போமேவம்மானே
வீண்போகாதேமனையேவிழவுதைத்தாரம்மானே.

வேதமெடுத்துவிளங்குகின்றமெய்ப்பொருளே
பாதமிருக்கும்பரிசரியாரம்மானே
பாதமிருக்கும்பரிசரியாராமாகில்
காதவழியோடிக்கலங்குவதென்னம்மானே
கலங்காமலெவ்வுயிருங் கண்ட துண்டோவம்மானே.

ஆதிலனிலாதியறிந்துரைக்கமாட்டாதார்
சோதியொளிவதனைச்சொல்லுவரோவம்மானே
சோதியொளிவதனைச்சொல்லுவரேயாமாகில்
வாதிதனக்குள்ளாகிமயக்கருத்தாலம்மானே
வருந்தாதோமாயைமயக்கருத்தாலம்மானே. ௪௫

சித்தசன்றன்னைத்திருவாய்மெய்த்தேசிகனை
உற்றபொருடன்னையுண்டறியாரம்மானே
உற்றபொருடன்னையுண்டறியாராமாகில்
அத்தனிவனிடமாயாடுவனேவம்மானே
ஆடானேதன்றொழிலிலாடுவன்காணம்மானே, ௪௬

எட்டெழுத்து மைந்தெழுத்துமேகமெனுமோரெ
ழுத்தும்,தொட்டெழுத்தைக் காட்டுந்துறை யறியா
ரம்மானே, தொட்டெழுத்தைக் காட்டுந்துறையறி
வாராமாகில், சுட்டசுடுகாடுசென்று சொல்லுவரோ
வம்மானே, சொல்லுவார் குருவினரு டொந்திப்பா
யம்மானே. ௪௭

சாதிகுலமொன்றாகத்தர்க்கமிடும்பேதையர்கள்
சாதிகுலமின்னதென்றுதாமறியாரம்மானே
சாதிகுலமின்னதென்றுதாமறிவாராமாகில்
ஆதியந்தநாதமறிவரோவம்மானே
அறியாதவாசியதேயாணவங்காணம்மானே. ௪௮

சாத்திரங்கற்றுந்தனையறியமாட்டாதார்
வேர்த்துறக்கம்வந்தவிதமறியாரம்மானே
வேர்த்துறக்கம்வந்தவிதமறிவாராமாகில்
சூத்திரத்திற்சூட்சமுனைசொல்லுவரோவம்மானே
சொல்லார்குருவினருடொந்திப்பாரம்மானே. ௪௯

குருவையறியார்குருவினருடாமறிவார்
திருவையெடுத்ததிறமறியாரம்மானே
திருவையெடுத்திறமறிவாராமாகில்
மதுப்போதுகொண்டுவந்தவகையறியாரம்மானே
வகையறியார்வாசியன்றோமாயைகாணம்மானே. ௫௦

சந்திரனைச்சூரியனைத்தாமறியமாட்டாதார் [னே
அந்தரத்தைப் பார்த்துப்பார்த் தலைவதென்னம்மா

அந்தரத்தைப்பார்த்துப்பார்த்தலைவரேயாமாகில்
சந்திரனோடொன்றுஞ்சரியாகாரம்மானே
சரியாவாசகலகுணந்தாமடுத்தாரம்மானே. ௫௧

வீடுகட்டிவீடெடுத்தவீடிடந்துபோவார்கள்
பாடுபட்டுப்பெற்றபதியறியாரம்மானே
பாடுபட்டுப்பெற்றபதியறிவாராமாகில்
கூடுவிட்டுப்பாயுங்குறிப்பறிவாரம்மானே
குறிப்பறியாமானிடர்கள்குருடர்காணம்மானே ௫௨

எல்லையற்றதொன்றேயிருக்குமிடமறியார்
கல்லையுருவாக்குவித்துக்கைதொழுவாரம்மானே
கல்லையுருவாக்குவித்துக்கைதொழுவாராமாகில்
சொல்லுக்கேயிங்கிதமாய்ச்சொல்லுமோவம்மானே
சொல்லாதோதன்மனதுசொல்லிடுங்காணம்மானே.

பின்னாசைகொண்டுபிதற்றுகின்றபேதையர்கள்
தன்னாசைநின்றதலமறியாரம்மானே
தன்னாசைநின்றதலமறியாராமாகில்
பன்னும்பொருளறிந்துபற்றுவரோவம்மானே
பற்றுவாரந்தப்பதியறிந்தாலம்மானே. ௫௪

தம்பட்டமேளந்தவின்முரசுமெக்காளம்
தொம்பிட்டசந்தந்தொனியறிவாரம்மானே
தொம்பிட்டசந்தந்தொனியறிவாராமாகில்

கும்பிட்டுநின் றுகுழைவதென்னம்மானே
குழைவாரொருவனையேகூடவொண்ணாரம்மானே.

அன்னைசுற்றம் பெண்டுபிள்ளையாசையென் னுமிப்
பொருளை, இன்னநிறமின்னகுணமென் றறியாரம்மா
னே, இன்னநிறமின்னகுணமென் றறிவாராமாகில்
தன்னுருவங்கண்ட நிறஞ்சாற்றுவரோ வம்மானே
சாற்றுவார்சற்குருவைச்சார்ந்தக்காலம்மானே. ருசு

சித்திரத்தைப்போலுருவைச்சேர்த்தெடுத்துவை
த்தாலும், உத்தரத்துக்குத் தரமோங்குமோ வம்மா
னே, உத்தரத்துக்குத்தரமோங்குமேயாமாகில்
மற்றுமொருரூபம்வழங்குவதென்னம்மானே
வழங்குவரோமாவடியில்வாழ்ந்திருந்தாரம்மானே.

உச்சிதமதியைமொழிந்தேன்பகலுலகில்
உச்சிதமதியையுயரறியாரம்மானே
உச்சிதமதியையுயரறியாராமாகில்
உச்சிதமதியையுண்ணரோவம்மானே
உண்ணரோஉட்பொருளையுண்டவர்காணம்மானே.

நாமமிடுவார்நடுவேநடுவிடுவார்
நாமமிருக்குநடுவறியாரம்மானே
நாமமிருக்குநடுவறியாராமாகில்
காமனையுங்காலனையுங்கட்டுவரோவம்மானே
கட்டாரேமேலிருத்திக்கண்டக்காலம்மானே. ருகூ

மந்திரத்தைக்கற்றுமதிமயங்கும்பேதையர்கள்
மந்திரத்தின்வித்துவகையறியாரம்மானே
மந்திரத்தின்வித்துவகையறியாராமாகில்
அந்தரத்தினுட்பொருளையறிகுவரோவம்மானே
அறியாரோதங்களறிவினாலம்மானே. சு0

பெண்ணறிந்து மாணறிந்தும் பேசும்பொருளறிந்
கண்ணறிந்துவாழக்கணக்கறிவாரம்மானே [தும்
கண்ணறிந்துவாழக்கணக்கறிவாராமாகில் [மானே
பெண்ணிதென்றுமாணிதென்றும் பேசுவதென்னம்
பேசும்பொருளறிந்தால்பேசார்காணம்மானே. சுக

எட்டெழுத்தேவீடாயியைந்தநடுவணையைப்
பட்டுருவிப்பார்க்கப்பரிசறியாரம்மானே
பட்டுருவிப்பார்க்கப்பரிசறியாராமாகில்
எட்டெழுத்தையீன்றவியலறியாரம்மானே
இயலறியவாசியன்றோவெய்துமதுவம்மானே. சுஉ

சித்தாந்தந்தன்னைத்தெளியவறியாதார்
பெற்றதிருநாமம்பேசுவரோவம்மானே
பெற்றதிருநாமம்பேசுவரேயாமாகில்
வித்தானவித்தைவிளம்புவரோவம்மானே
விளம்புவார்மெய்ப்பொருளைமேவினாலம்மானே.

ஐம்பத்தோர்சக்கரத்தையாராய்ந்தறியாதார்
கம்பத்தொழிறன்னைகண்டறியாரம்மானே

கம்பத்தொழிற்றன்னைக்கண்டறியாராமாகில்
செம்பொற்பதத்தையிவர்சேருவரோவம்மானே
சேருந்திருநாமஞ்செப்புவரேயம்மானே. ௯௪

ஆடும்பதியையறிந்துரைக்கமாட்டாத்தார்
கூடும்பொருளறிந்துகூடுவரோவம்மானே
கூடும்பொருளறிந்துகூடுவரேயாமாகில்
வீடறிந்துகொண்டுவிளம்புவரோவம்மானே
விளம்பாதபேதையர்க்குமெய்வருமோவம்மானே ()

சந்திரனைக்காணுதேதயங்குகின்றபேதையர்கள்
அந்திப்பகலானதுவேயங்குகின்றதம்மானே
அந்திப்பகலானதுவேயாய்ந்தறியாபேதையர்கள்
மந்திரத்தைக்காணுதேமயங்குவதென்னம்மானே
மயங்குவதுதான்சின்னமாயையாலம்மானே. ௯௬

அருளறிந்துசேர்வைக்கறியாதபேதையர்கள்
பொருளறிந்துசேர்க்கப்பொருதுவரோவம்மானே
பொருளறிந்துசேர்க்கப்பொருதுவரேயாமாகில்
இருடனையேநீக்கியிருப்பாரோவம்மானே
இருப்பாரனுதினமுமெங்கெங்குமம்மானே. ௯௭

வாசிக்குள்ளாகிமயங்குகின்றபேதையர்கள்
வாசிதனைக்கட்டவகையறியாரம்மானே
வாசிதனைக்கட்டவகையறிவாராமாகில்

தேசிகனைக்கண்டுதெரிசிப்பாரம்மானே
தெரிசிப்பார்சித்தர்சிவபத்தரம்மானே. கூஅ

தாயையறியாதார் தகப்பனையுந்தாமறியார்
தாயிருந்தவத்தலமுந்தாமறியாரம்மானே
தாயிருந்தவத்தலமுந்தாமறிவாராமாகில்
காயமுருவானத்தைக்கண்டறியாரம்மானே
காமனையுங்காலனையுங்கணக்கறியாரம்மானே. கூகூ

ஒடுக்கமறியாருணர்வுநினைவறியார்.
படுக்கையிலேநித்திரையைபார்த்துறங்காரம்மானே
படுக்கையிலேநித்திரையை பார்த்துறங்காராமாகில்
எடுத்துரைத்தசாத்திரங்களிறந்தனகாணம்மானே
இறந்துபிறப்பனவுமிருவினைகாணம்மானே. எ0

தன்வீடுந்தன்முதலுந்தாமறிந்துவாழாமல்
பின்வீடும்பின்முதலும்பேணுவர்காணம்மானே
பின்வீடும்பின்முதலும்பேணுவரேயாமாகில்
தன்வீடுந்தன்முதலுந்தாமறிந்தாரம்மானே
தாமறிந்தால்வீடுகட்டத்தலமறியாரம்மானே. எக

தன்மமறியார்தவத்திநிலையறியார்
இம்மையிலேமோட்சகதியெய்துவரோவம்மானே
இம்மையிலேமோட்சகதியெய்துவரேயாமாகின்
இம்மையிலேமோட்சம்யெய்துவரேயாகில்
தன்மமறியாமற்றவிப்பதென்னவம்மானே. எஉ

உள்ளத்தினுள்ளேயொளித்திருக்குமுத்தமனைக்
கள்ளத்திருக்கருத்துக்காண்பாரோவம்மானை
கள்ளத்திருக்கருத்துக்காண்பாரேயாமாகில்
தள்ளப்படாதென்றறிவினை தள்ளுவரோவம்மானை
தள்ளுவார் தாமிருக்குந்தவமறியாரம்மானை. ௭௩

கடையறிந்துவிற்கக்கணக்கறியாமூடர்களாம்
எடையறிந்துவாணிபத்தைளய்துவரோவம்மானை
எடையறிந்துவாணிபத்தையெய்துவரேயாமாகில்
கடையறிந்துதான்சரக்கைக்கட்டுவரோவம்மானை
கட்டறியாவாசியன்றேகலங்குவதுவம்மானை. ௭௪

தில்லையறியார்சிவதலத்தைதாமறியார்
எல்லையில்லாப்பேரொளியினெய்துவரோவம்மானை
எல்லையில்லாப்பேரொளியினெய்தாததன்மையன்
கல்லையுருவாக்குவித்துக்கைதொழுதாரம்மானை
கைதொழுதுநிற்பதுவுங்கற்பனைகாணம்மானை. ௭௫

இறந்துபிறப்பவர்க்குயெத்தனை தான்சொன்னாலும்
மறந்தெழுந்துபோனவர்க்குமதிவருமோவம்மானை
மறந்தழிந்துபோனவர்க்குமதிவருமேயாமாகில்
பிறந்தமதியிருந்ததுவும்பிறப்பறியாரம்மானை
பிறப்பறியார்குலம்பிரித்து பேசுவதென்னம்மானை.

தன்னையறியார் தலைவனையுந்தானறியார்
பின்னைக்குருபீடமென்றுபேசுவரேயம்மானை

பின்னைக்குருபீடமென்றுபேசுவரேயாமாகில்
தன்னையறியாதகுருசாதிகுருவம்மானே
சாதிகுருதர்க்கமிட்டுத்தாமலைவாரம்மானே. எஎ

உள்ளும்புறம்புமொருசமயமாயிருக்கக்
கள்ளாறுசமயங்கண்டதுண்டோவம்மானே
கள்ளாறுசமயங்கண்டதுண்டேயாமாகில்
கொள்ளுந்தொழிலைக்குலம்பிரித்தாரம்மானே
பிறந்தகுலம்பிரித்தும்பேசுவரோவம்மானே. எஅ

வீட்டுவிளக்கைவிளக்கியறியாமல்
காட்டுவிளக்கையொன்றுகைதொழுதாரம்மானே
காட்டுவிளக்கையொன்றுகைதொழுதாராமாகில்
கூட்டுவிளக்கைக்குறிப்பறியாரம்மானே
குறிப்பறியாமானிடர்கள்குருடர்காணம்மானேஎஎ

நாட்டிலுள்ளகல்லையெல்லாம்நன்றாகவேதிரட்டிக்
கூட்டியுருவாக்குவித்துக்குருவறியாரம்மானே
கூட்டியுருவாக்குவித்துங்குருவறியாராமாகில்
ஏட்டிலுள்ளபாட்டையெல்லா மெடுத்துரைத்தாரம்மானே
எடுத்துரைத்தார்பயனவற்றுலெய்துவரோவம்மானே

தன்னுருவினின்றுதயங்குகின்றசிவனைத்தான்
இன்னவுருவின்னநிறமென்றறியாரம்மானே
இன்னவுருவின்னநிறமென்றறியாராமாகில்

தன்னுருவிற்பாய்ந்தவுயிர்தாமறியாரம்மானே
தாமறியார்சித்தந்தானறியாரம்மானே. ௮௧

மூக்காலுங்காகமுழுகிக்குளித்தாலும்
கொக்காகியிக்குலத்திற்கூடுமோவம்மானே ,
கொக்காகியிக்குலத்திற்கூடுமேயாமாகில்
இக்காலமிப்புவியிலிறப்பதுவென்னம்மானே
இறவாதிருக்குமிடமறியாரம்மானே. ௮௨

இருளையிருள்விழுங்கியீரறிவுமோரறிவாய்
பொருளைவிழுங்கும்பொருளறியாரம்மானே
பொருளைவிழுங்கும்பொருளறியாராமாகில்
இருடனுக்குள்ளேயிருப்பதுவென்னம்மானே
இருளுமதைநீக்கியிருப்பதுவென்னம்மானே. ௮௩

வெண்ணீறிடுவார்விழுவார்விதம்விதமாய்
வெண்ணீறுபூத்தவிதமறியாரம்மானே
வெண்ணீறுபூத்தவிதமறியாராமாகில்
மண்ணீறிருக்கும்வகையறியாரம்மானே
வகையறியவாசியல்லோமயங்குவதுமம்மானே. ௮௪

தந்தைக்குமுன்பிறந்துதகப்பனுக்குபோதகத்தை
அந்தமுதருன்கடந்தேயறிவித்தாரம்மானே
அந்தமுதருன்கடந்தேயறிவித்தாராமாகில்
தந்தையிடமாகவல்லோதாமிருந்தாரம்மானே
தாமிருந்தும்பொருளைத்தாமறியாரம்மானே. ௮௫

பிறந்தவுடலைவிட்டுப்புறம்போனசிவனைத்தான்
உறங்குதென்றுசொல்லவுறக்கமுண்டோவம்மானே
உறங்குதென்றுசொல்லவுறக்கமுண்டோயாமாகில்
உறக்கமுமற்றேயோடுதுகாணம்மானே
ஓடுகின்றசிவனுக்கேயுணர்படுவாரம்மானே. ௮௬

கட்டாணிமுத்துக்கயற்கண்ணிபங்கிலுறை
அட்டாலைச்சொக்கருக்கேயாருசிரசம்மானே
அட்டாலைச்சொக்கருக்கேயாருசிரசாமாகில்
எட்டாதவெள்ளமிழுக்குமோவம்மானே
இழுக்கும்பெருகரையிலிருப்பவரையம்மானே. ௮௭

ஆயன்கடைகடக்கவம்பலமுமாயிருக்க
மாயமாயாடெடுத்தமகதேவரம்மானே
மாயமாயாடெடுத்தமகதேவராமாகில்
ஆயனுஞ்சற்றேயறிவாரோவம்மானே
அறிந்தல்லோநித்திரைக்கண்ணனார்காணம்மானே.

குற்றமில்லாச்சங்கரனார்கோயிலுக்குள்ளேயிருவர்
புற்றுமண்ணையீந்துபொருள்பறித்தாரம்மானே
புற்றுமண்ணையீந்துபொருள்பறித்தாராமாகில்
சற்றுமண்மீதிற்றானில்லையோவம்மானே
இல்லையென்றபேர்க்கீசனில்லைகாணம்மானே. ௮௯

பொய்யுங்களவும்புலையுந்தவிராதார்
பொய்யுங்களவும்புலைதவிர்த்தாரம்மானே

பொய்யுங்களவும்புலைதவிர்த்தாராமாகில்
மெய்யென்றெடுத்துத்துணைமேவுவரோவம்மானே
மேவுவரோநின்றநிலைமேவினாலம்மானே. ௯0

நேரஞ்சிறுக்குநிலையறியமாட்டாதார்
பாரஞ்சிறுக்கும்பதியறியாரம்மானே
பாரஞ்சிறுக்கும்பதியறிவாராமாகில்
வீரஞ்சிறுத்துவிரைவுவரோவம்மானே
விரையாலநுபூதிவிதத்தினாலம்மானே. ௯௧

ஆங்காரமச்சமகத்தறியாமூடர்கண்டுமெய்
நீங்காதிருக்குநிலையறியாரம்மானே
நீங்காதிருக்குநிலையறிவாராமாகில்
போங்காலமானபொருளறியாரம்மானே
பொருளறியாப்பொய்க்குருவைப்போற்றுவதென்னம்மானே

இடமறிந்துகொண்டேயிருக்கறியாப்பேதையர்கள்
சடமறிந்துவாழத்தடமறியாரம்மானே
சடமறிந்துவாழத்தடமறியாராமாகில்
சடந்தனிலேசற்குருவைத்தாமறியாரம்மானே
தாமறியாத்தலைவனையுந்தானறிந்தாரம்மானே. ௯௩

சற்குருவினாசனத்திற்சரியாகவேயிருந்து
தர்க்கமிடுமூடருக்குத்தவம்வருமோவம்மானே
தர்க்கமிடுமூடருக்குத்தவம்வருமேயாமாகில்

மூவர் அம்மானை

சந்ததமும்பூபோற்றுஞ்சைவசோணாசலனார்
கந்தனது மாமிதன்னைக்கைபிடித்தாரம்மானை
கந்தனது மாமிதன்னைக்கைபிடித்தாராமாகில்
இந்தவுலகத்திற்கேற்குமோவம்மானை
ஏற்குமென்றேகையின்மழுவேந்தினார்காணம்மானை
விரிந்தபுகழ்புள்ளிருக்கும்வேளூர்வயித்தியனார்
பரிந்துவினை தீர்க்குந்தெய்வபண்டிதர்காணம்மானை
பரிந்துவினை தீர்க்குந்தெய்வப்பண்டிதரேயாமாகில்
மருந்துவிலைகைகூலிவாங்குவரோவம்மானை
வாயில்மண்போட்டுவாங்குவர்காணம்மானை. ௫

புள்ளிருக்கும்வேளூர்ப்புண்ணியனார்பெற்றமுத்து
பிள்ளைதனக்கிந்திரனார்பெண்கொடுத்தாரம்மானை
பிள்ளைதனக்கிந்திரனார்பெண்கொடுத்தாராமாகில்
வள்ளிதனைக்கொள்ளவழக்குண்டோவம்மானை
வள்ளியம்மையம்மான்மகளல்லோவம்மானை. ௬

மருப்பாரும்பூஞ்சோலைமலைவாழரங்கேசர்
திருப்பாற்கடலுடையசெல்வர்காணம்மானை
திருப்பாற்கடலுடையசெல்வரேயாமாகில்
ஏற்பாற்குப்பெண்கொடுப்பதேச்சலவோவம்மானை
என்றலவோமண்ணையுண்டிருந்தனர்காணம்மானை.

பசுவாகியேமனிளங்கன்றுகி
புகழாரூரின்வீதிவந்தாரம்மானே
புகழாரூரின்வீதிவந்தாராமாகில்
காசளவுபாற்றான்கறக்குமோவம்மானே
கன்றையுதைகாலிகறவாதேயம்மானே. ௮

எண்ணரியகச்சியில்வாழேகாம்பரநாதர்
அண்ணலெழின்மேனியெல்லாமாகாயம்மானே
அண்ணலெழின்மேனியெல்லாமாகாயமாமாகில்
தண்ணிலாவெண்முடிமேற்சடையானாரம்மானே
சடையானார்பேர்முடித்ததலையாமோவம்மானே. ௯

ஆரூர்வயல்சூழருணை அண்ணாமலைநாதர்
பேரரியவண்ணாரப்பெண்கொண்டாரம்மானே
பேரரியவண்ணாரப்பெண்கொண்டாராமாகில்
தாரணியில்யாவருக்குந்தப்புவரோவம்மானே
தப்புந்துறையறிந்துதப்புவர்காணம்மானே ௧௦

அடுத்ததிருக்காவேரியணியரங்கத்தெம்பெருமாள்
எடுத்தபடுக்கையைவிட்டெழுந்திலர்காணம்மானே
எடுத்தபடுக்கையைவிட்டெழுந்திலரேயாமாகில்
படுக்கையிலேவிடந்தீண்டிப்பட்டாரோவம்மானே
பட்டலவோவவருடலைப்பருந்தெடுத்ததம்மானே.

இப்புவியிலேநரகமெய்வதுவதென்னம்மானே
எழுநரகின்கீழேயிருந்தனர்காணம்மானே. ௬௪

அந்தபசும்பொற்கிரிவாழா திசத்திநாதரவர்
வந்தபுலித்தோலுரித்தவல்லாளரம்மானே
வந்தபுலித்தோலுரித்தவல்லாளராமாகில்
இந்தமலைமேலிருப்பதென்னவம்மானே
இருந்தார்மலையன்மகளின்பத்தாலம்மானே. ௬௫

மூவர் அம்மானை

முற்றிற்று.

தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
சென்னை 600 008
எழும்பூர்

விளம்பரம்.

இதனால் சகலமான கனதனவான்களுக்குத் தெரிவிப்பதுயாதெனில்; இப்புஸ்தகமும், அடியில்கண்ட புஸ்தகமும், இன்னும் இஸ்கூலுக்குரிய புஸ்தகங்களும், ஆறுமுகநாவலர் புஸ்தகங்களும், கதை, அம்மானை, நாடகம், விலாசம், கீர்த்தனை, புராணம், ஜோசியம், வைத்தியம், சதகம், சில்லரை புஸ்தகங்களும், வேண்டியவர்கள் வி. பி. மூலியமாயும் நேரிலும் விலை சரசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

விக்கிரமாதித்தன் பெரிய எழுத்து ஐதீகப் படங்களுடன்	விலை ரூபா	2	0
மதனகாமராஜன் பெரிய எழுத்து ஐதீகப் படங்களுடன்	விலை ரூபா	1	0
மயிலிராவணன் பெரிய எழுத்து ஐதீகப் படங்களுடன்	விலை அணா	0	6
ராமதாஸ்கீர்த்தனை சுத்தப்பதிப்பு ஐதீகப் படங்களுடன்	விலை அணா	0	6

அ. இரங்கசாமிமுதலியார் சன்ஸ்,

நெ-24, தாண்டவராயப்பிள்ளை வீதி,

சௌகார்பேட் போஸ்டு, மதறாஸ்.